விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 20 ஜ. ஆகி 22 இதழ் 22
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4 3 1986

## கடற்கண்ணிக்கு 12 கடற்படையினர் பலி!

[யாழ்ப்பாணம்]

கடற்படைக்குச் சொந்தமான படகொன்று தமதுஇயக்கப் போராளிகளால் கடலில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியதில் அதிலிருந்த 12 கடற்படையினர் ஸ்தலத்திலேயே பலியானதாகத் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று நண்பகல் 12-30மணியளவில் நயினா தீவுக் கடற்படை முகாமுக்கு '118-இலக்கம்' கொண்ட படகொன்று உணவுகொண்டு சென்றது. அப்படகில் 12கடற்படையினர் இருந்தனர்.

''இறுப்பிட்டிக்கும் நயினா தீவுக்குமிடையே இப்படகு சென்றுகொண்டிருந்த பொழுது 'தமிழீழ விடுதலைப் புலி'களால் வைக்கப்பட்டிருந்த கடற் கண்ணிவெடித் தாக்குதலினால் அப்படகு சுக்குநூறானதுடன், அதிலிருந்த 12 கடற்படையினரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

[5-ம் பக்கம் பார்க்க]

# வண. சிங்கராயர், வண. சின்னராசா

## நீர்வேலி வங்கி கொள்ளை வழக்கில் விடுதலை!

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்டிருந்த வண. பிதா ஆபரணம் சிங்கராயர், வண. பிதா அன்ரன் சின்னராசா ஆகிய இருவரையும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா நிரபராதிகள் எனக்கூறி நேற்று விடுதலை செய்தார்.**

**இத்துடன் 180 நாட்களாக நடந்த இந்த வழக்கு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.**

1981-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி நீர்வேலியில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை பற்றிய தகவல்களை தெரிந்திருந்தும்பொலிசாருக்கு வழங்கத் தவறினார்கள் என்று இவ்விரு மதகுருமார்மீதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வண. பிதா சின்னராசா நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருக்காததால் அவரில்லாமலேயே வழக்கு நடந்தது.

இவ்வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்ததையடுத்து நீதிமன்ற வளவினுள் பெருந்தொகையான மக்கள் குழுமியிருந்தனர்.

இவர்களில் பெரும்பான்மையினராகத் தமிழர்கள் அதிலும் குறிப்பாக இளைஞர், யுவதிகள் இருந்தது குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ்மக்கள் போராட்டம் ஓயப்போவதில்லை"

### –வண. பிதா சிங்கராயர்

[கொழும்பு]

''தமிழ் மக்கள் தம் விடுதலைக்காகப் போராடுகின்றனர். இந்தப்போராட்டம் ஓயப்போவதில்லை. இதனால் பாதிக்கப்படும் சிங்கள மக்களுக்காக நாம் அனுதாபப்படுகிறோம்.

இவ்வாறு நேற்று நீர்வேலி வங்கிக்கொள்ளை சம்பந்தமான வழக்கில் விடுதலைபெற்ற வண. பிதா சிங்கராயர் விடுதலை பெற்றதும் தம்மைகை குலுக்கி வாழ்த்துக்கள் வழங்கிய நண்பர்களிடம் தெரிவித்தார்.

## ...ஆனாலும் சாவகச்சேரி வழக்கில் விளக்கமறியல்!

[கொழும்பு]

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் வழக்கு சம்பந்தமாக, வண. பிதா சிங்கராயர் மீண்டும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை சம்பந்தமாக விடுதலையானதும் வண சிங்கராயர் மீண்டும் கைதானார்.

82-ல் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் காயமடைந்த பயங்கரவாதிகளுக்குப் 'பெத்தடின்' ஊசி போட்டது, அவர்களுக்குப்புகலிடம் அளித்தது ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக வண. பிதா சிங்கராயர், திரு. மு. நித்தி

[5 ம் பக்கம் பார்க்க]

## மகள் முன்னிலையில் தந்தை சுட்டுக்கொலை!

[வவனியா]

மாங்குளம் - வவனியா வீதி வழியாக வந்த இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்

(5ம் பக்கம் பார்க்க)

## பலாலி ஆசிரியர் கலாசாலை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு நேற்று இடமாற்றம் செய்யப்பட்டது.

இதற்கிணங்க பெண்கள் விடுதியும், பிரார்த்தனை மண்டபமும், நூல் நிலையமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும், வகுப்புகளும், விரிவுரையாளர் ஓய்வறையும் அலுவல

(8-ம் பக்கம் பார்க்க)



## பர்மிய இளைஞர்களின் கடல் அனுபவம்

— கா. யோகநாதன் —

தாழையடி மாமுனை கடற்கரையில் மயக்கமடைந்த நிலையில் பொதுமக்களால் காப்பாற்றப்பட்ட நன்கு பர்மிய இளைஞர்களும் நேற்றுக்காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு. பின்னர் பர்மா தூதராலயத்துடன் தொடர்பு ஏற்படுத்திய பின்னர் அங்கு அனுப்பி வைப்பதற்காக கோட்டை இராணுவமுகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலும் மயிலும், பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்' உப-தலைவர் திரு. க. தேவராஜன் ஆகியோர் நேற்றுக்காலை பர்மிய இளைஞர்களை யாழ். கச்சேரிக்கு அழைத்துவந்து அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தனர்.

வெள்ளை கோடிட்ட 'பிறவுண்' நிற சாரங்களை நால்வரும் அணிந்து சேட் போட்டிருந்தனர்.

இருவர் கழுத்தில் ஒரு துணியைச் சுற்றியிருந்தனர். நால்வரும் அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சென்று அங்கு தங்கியிருந்தனர். இவர்களை பொதுசன தொடர்பு அதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான திரு ரீ. குலசேகரம் கோட்டைக்கு அழைத்துச் சென்று ஒப்படைத்தார்.

அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் பர்மிய தூதராலயத்துடன் தொலைபேசி மூலம் தூதராலய இரண்டா

(8ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று ஒருவர் பலி

[கிளிநொச்சி]

ஆயுதப் படையினர் சுட்டதில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்! சடலம் கிளிநொச்சி அரசினர்ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கிளிநொச்சியிலுள்ள கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நடந்தது.

ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர் கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த அல்பிரெட் (வயது 40) என்பவராவார்.

நேற்றுக் காலை கரடிப்போக்குச் சந்தி வழியாக 11 கவச வாகனங்களில் வந்த ஆயுதப்

[8-ம் பக்கம் பார்க்க]

### பாலம் தகர்ப்பின் எதிரொலி:

## பஸ்கட்டணமும் அதிகரித்தது!

[யாழ்ப்பாணம்]

புத்தூர்-சாவகச்சேரி ஊடாகச் செல்லும் வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ்களின் கட்டணம் நேற்றுமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்பாதை வழியாகச் செல்லும் சகல பஸ்களுக்கும் 3 ரூபா 25 சதம் அதிகரிக்கப்பட்டுள்ள

[8-ம் பக்கம் பார்க்க]

# வரிவிளம்பரம்

## தேவை

வடமாகாணத்தில் பிரபல்யம் அடைந்து வரும் தேயிலைக்கு - அனுபவம் வாய்ந்த விற்பனைப் பிரதிநிதி தேவை. 10-3-86க்குமுன் விண்ணப்பிக்கவும். இல: 18. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 1030

## விற்பனைக்கு

முட்டை, புரொயிலர்கோழி [BROILERS] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 660, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C969]

விஞ்ஞானம் ஆண்டு 4—13-00; ஆண்டு 5—16-00 பிரான்சிஸ் - ஞானப்பொன்ராஜ்; ஆண்டு 7—7-00 ஆண்டு 8 8-50 திருமதி சி. குணரட்ணம் - யாழ் இந்து மகளிர் கல்லூரி விஞ்ஞான ஆசிரியை. 1986 தை முதல் அமுலுக்கு வந்த புதிய பாடத் திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. வி. பி. பி உண்டு. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம்
(C 982)

A/L பொது இரசாயனம் M. C. Q. வினா-விடை நூல் 1 வெளிவந்துவிட்டது. ஆசிரியர் சத்தீஸ். கிடைக்குமிடம் பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம். 108, Brown Road Jaffna.
(C320)

அதிநவீன நாஷனல் பனசொனிக் 100 அங்குல திரைக்குக் காண்பிக்கக் கூடிய வீடியோ புறயெக்ரர் விற்பனைக்குண்டு. மினி றேட் சென்ரர், No 3, ஜே. எம். சி. பில்டிங், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (C1048]

## காணவில்லை

ஸ்ரீபன் சகாயமணி. 14 வயதும், கறுப்பு நிறமும், 4 1/2 அடி அளவு உயரமும்கொண்ட இவரை 1-3-86ந் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் காணவில்லை. கறுப்புக் காற்சட்டையும், வெற்மண்நிற சேர்ட்டும் அணிந்திருந்தார். கண்டவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. தருமரத்தினம், இராமகிருஷ்ண பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [C1047]

## வகுப்புகள்

A/L 87 அசேதன இரசாயனம் ஆரம்பம் (5-3-86) புதன் 6-15 a m. A/L 86 வினா விடை வகுப்பு ஆரம்பம் (8-3-86) சனி 3-15 p. m. சனி, ஞாயிறு 3-15 p. m. ஆசிரியர் சத்தீஸ். 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(A 319)

பங்குனி மாதம் தொடக்கம் வார இறுதி நாட்களில் தையல் வகுப்புகள் Scientific Cutting and Embroidery, Singer Diploma பட்டம்பெற்ற ஆசிரியையினால் நடாத்தப்படவுள்ளது. தொடர்பு கொள்க: சோ. யோகநாதன், 16, விதானையார் வீதி, சுண்டுக்குளி. [C963]

---

உ

## அந்தியேஷ்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
ந. இராசம்மா

3-2-86 சிவபதமெய்திய எமது அன்புத் தாயார் திருமதி இராசம்மா நவரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று [4-3-86] செவ்வாய்க்கிழமையும். நாளை புதன்கிழமை [5-3-86] வீட்டுக் கிருத்தியமும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சமுகமளித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

96, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். C-1046

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



இராசா கண்ணன்

தோற்றம்: 28-02-1938
மறைவு: 04-03-1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை அன்பால் வர்ஷித்து நாம் வாழ்வாங்கு இவ்வையத்தில் வாழவழி வகுத்து எமது நலமே தன் நலமாகக்கொண்டு ஜேர்மனி சென்று சடுதியாக மறைந்து எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்தியதால் நாம்படும் துயர் சொல்லுந்தரமன்று. நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எமது மனதில் என்றென்றும் பசுமையாக நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி பரமேஸ்வரி,
மக்கள், மருமகன்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்,

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. C-967

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## பரிசளிப்பு விழா 8 - ல் நடைபெறும்

[பண்டத்தரிப்பு]

கீரிமலை சிவநெறிக் கழகம் அண்மையில் நடத்திய நவான்மை, பண்ணிசை போட்டிகளினதும், நீதிச் செய்யுள் மனனப் போட்டி தொண்டுபடும் செயல்முறைப் போட்டி ஆகியவற்றினதும் பரிசளிப்பு விழா இம்மாதம் 8 - ம் திகதி சனிக்கிழமை கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறவுள்ள இப் பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கழகப் புரவலர் சட்டத்தரணி ம. சிதம்பரநாதன் வழங்குவார்.

பருத்தித்துறை பகுதியை சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி பரிசளிப்பு வைபவம் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி மு. க. முருகானந்தன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர் செல்லத்துரை
வைத்தீஸ்வரன்
(இ. போ. ச.)

அன்னை மடியில்:
09-06-1937

ஆண்டவன் அடியில்:
13-02-1985

இன்று
திதி: 04.03-1986

அன்பின் உருவமே அழகியதோற்றமே குழந்தை உள்ளமே கனவின் நிறைவே எங்கள் குடும்பத்தில் குலவிளக்காய் இருந்துதிடீரென எம்மை விட்டுப் பிரிந்து விட்ட எங்கள் அன்புத்தெய்வமே! நிச்சயம் எமது கனவில் உறவாடி ஆறுதல் கூறவாரீரோ! உங்கள் ஆத்மசாந்திக்கு கண்ணீர் பூக்களால் அர்ச்சனை செய்கின்றோம். உங்கள் அன்பு முகத்தையே காணாது ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவும் உங்கள் கனவும் எமக்கு என்றும்பசுமையேஎம்மை ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்டு மிக்க குறுகிய காலத்துள் மீளாத்துயில் கொண்ட எம அன்புத் தெய்வமே உங்களுக்கு இறைவன் கட்டாயம் சாந்தி அளிப்பான்.

இன்று நடைபெறும் தங்கள் ஆண்டுத் திவசத்தில் சகலரும் பங்கு பற்றி பிரார்த்திப்போம்.

உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். C-1033

---

# இன்றைய பலன்

மாதம்: மாசி
திகதி: 20 1986-3-4)
கிழமை: செவ்வாய்
திதி; நவமி முழுநாளும்
நட்சத்திரம்: கேட்டை பிற்பகல்வரை

மேடம்: பணம் பலவழிகளிலும் செலவாகும். அந்நியர் ஒருவரால் ஏமாற்றப்படலாம். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும்.

இடபம்; குடும்பப்பிரச்னைகளில் சுமுகமான நிலை உருவாகும். சுற்றுடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும். வரவுக்கும் இடமுண்டு.

மிதுனம்: தொழில்துறையில் நஷ்டத்திற்குமிடமுண்டு. நண்பனின் கடிதம் வேதனை தரும். மனத்திடம் வேண்டும்.

கடகம்; தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

சிங்கம்: உத்தியோக உயர்வுகளும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்ததாக இருக்கும். பொருள்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். திருப்திகரமான இடமாற்றங்களும் இடம்பெறும்.

கன்னி: உழைப்பினால் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் விருத்தியேற்படும் உயர் கல்வியில் ஈடுபடுவோர்களுக்கு உற்சாகமான தினம். பொருள் வருவாயும் சிறப்பாக இருக்கும்.

துலாம்: கண் துடைப்பு வேலைகள் இடம்பெறும். கால் நடைகளினால் நஷ்டமுண்டு. மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும். குடும்பத்தில் உறவுமுறைகள் திருப்திகரமாக இருக்காது. கருடப்பார்வை உங்களை வட்டமிடும்.

விருச்சிகம்: துன்பத்தின் ரேகை படரும். எதற்கெடுத்தாலும் சீறிவிழுவார்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும். தொழில்துறைகளிலும் தொல்லைகள் தோன்றக்கூடும்.

தனுசு: பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு. சிறப்பான தினம்.

மகரம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

கும்பம்: வாழ்வில் இன்று வெற்றித் திருநாள். எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புதிய பொருள் கொள்வனவு செய்வதற்கு நன்று வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

மீனம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கங் காட்டுவீர்கள். தாராள குணத்தின் மூலம் பொருளும் செலவாகும். புண்ணிய யாத்திரையுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

---

O. L. M. ISMAIL,
(Attorney-at-law)
Wellington Lane.
Trincomalee.

NOTICE OF ORDER NISI

IN THE DISTRICT COURT OF TRINCOMALEE

Testamentary )
Jurisdiction ) No. 587
Case )

In the matter of the Last-Will and Testament of the late Ramalingam Mylvaganam of Murugankovilady, Linganagar Trincomalee

- Deceased.

Mylvaganam Selvamalar of Murugankovilady Linganagar Trincomalee

- Petitioner.

It is hereby notified that the above-numbered testamentary action has been instituted in the above Court for proof of the Last Will of the above-named deceased and Order Nisi has beenentered accordingly therein.

Any person interested is hereby required to appear before this Court on the 6th day of February, 1986 at 9'o clock in the forenoon and show cause if any, why the Order Nisi so entered should not be made absolute.

By Order of Court
Registrar D.C.

Dated this 6th day of February, 1986
6.2 86 —Extended and Reissued for 6.3 86.

C 1032

---

## தவக்காலச் சிந்தனை



21-ம் நாள்

இராயப்பர் யேசுவை அணுகி 'ஆண்டவரே என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றம் செய்து வந்தால் நான் அவனை எத்தனைமுறை மன்னிப்பது? ஏழுமுறைவரைக்குமா?' என்று கேட்டார். அதற்கு இயேசு 'ஏழுமுறை என்றன்று, எழுபதுமுறை ஏழுமுறை என உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மன்னிப்பின் மகத்துவத்தை மனிதர்களுக்கு உணர்த்திய மன்னிப்பின் மன்னன் கிறிஸ்து கூறிய வார்த்தைகள் இவை. 'தந்தையே இவர்களை மன்னியும்' என்று மன்னிப்பை எதிரிகளுக்கு வழங்கி, வாழ்ந்து காட்டிய வள்ளல் கிறிஸ்துவின் வார்த்தைகள் இது. இறைமகன் கிறிஸ்து தன்னை மன்னிக்கும் இறைவனாக காட்டுகின்றார். ஏனென்றால் மன்னிப்பது இறைவனின் இயல்பு.

தவக்காலம் அது மன்னிப்பின்காலம். மனம் திரும்பி எதிரிகளை மனமார மன்னிக்கும்காலம். இறைவனின் மன்னிப்பை ஏற்று அவரிடமிருந்து பெற்றுக்கொண்டமன்னிப்பை ஏற்றுக்கொண்ட நாம் மற்றவர்களுக்கும் அந்தமன்னிப்பை வழங்கும்காலம். பொல்லாத நெஞ்சுக்கு நிம்மதி இல்லை. பூப்போன்ற நெஞ்சுக்கு என்றும் நிம்மதி உண்டு. மன்னிப்பு, மனதிற்குஅமைதியைத் தருகின்றது. ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமல்ல உண்மையான மன்னிப்பு உடல் உளத்திற்கு நலத்தைத்தருகின்றது. மன்னிக்கத் தெரிந்த மனம் மாணிக்கக் கோவிலல்லவா. எனவே நாமும்நம்மை வெறுப்பவரை, இகழ்பவரை மன்னித்து, மறந்து மாணிக்கக் கோவில்களாக மாறுவோம்.

எஸ். டேமியன்
அ. ம. தி.

# "இந்தியாமீண்ட தோட்ட தொழிலாளருக்கு பல லட்சம் ரூபா இலங்கையில் பாக்கி!"

## சென்னையில் செல்லச்சாமி

(சென்னை)

இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இலங்கை இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீண்ட காலமாகக்கொடுக்கப்படாமல் இருக்கும் சேமநிதி மற்றும் இதர கொடுப்பனவுகள் சம்பந்தமான பிரச்னை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது'' என்று இ. தொ. கா. செயலர் திரு. எம். எஸ். செல்லச்சாமி கூறினார்.

நேற்று முன்தினம் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கூறிய திரு. செல்லச்சாமி, இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல லட்சம் ரூபா பாக்கித்தொகை இருப்பதாகத் தெரிவித்தார்.

சமீபத்தில் இலங்கை அரசு நாடற்ற மக்களுக்கு வழங்கிய பிரஜாவுரிமை குறித்து அனைத்துவசதிகளையும் இவர்கள் பெருவதற்கான சகல முயற்சிகளையும் இ. தொ. கா. செய்துவருவதாகவும் கூறினார்.

இலங்கையில் வசிக்கும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இலங்கையில் விரைவில் அமைதிநிலவவேண்டும் என்ற கருத்து உருவாகி வருவதாகக் கூறியஅவர் இனப் பிரச்னையைத் தீர்க்கப்பேச்சு வார்த்தை நடக்குமேயானால்; இலங்கை அரசும் தமிழர் அமைப்புகளும் புதியதோர் போர்நிறுத்தத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்'' என்றார். (பி)

# உலகச் செய்திகள்

## 2000 பேர் வீடிழந்தனர்

(டாக்கா)

தெற்கு பங்களாதேஷின்ஒரு நகரில் தொழிலாளர் வசிப்பிடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 2000 பேர் வீடுகளை இழந்தார்கள்.

40 பேர் காயமடைந்தனர் என்றும் 10 பேருக்கு அதிகமானோர் நிலை கவலைக்கிடம் என்றும் அறிய வந்துள்ளது.

சமையல் அறையிலிருந்து ஆரம்பித்த இந்தத் தீயை அணைக்க தீயணைக்கும் படைக்கு சுமார் 2 மணி நேரம் எடுத்தது. [ச]

## கொரிய பிரதமர் இந்தியப் பயணம்

[புதுடில்லி]

இந்தியாவுக்கான 4 நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு தென் கொரிய பிரதமர் திரு சின்லீ சொங் நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு.பல்ராம் பஹத் தென் கொரிய பிரதமரை விமான நிலையத்தில் வரவேற்றார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகக்குப் பதிலளித்த தென் கொரியப் பிரதமர் திரு சின் லீசொங்; இந்தியத் தலைவர்களுடன் இருதரப்பு மற்றும் சர்வதேச நிலை குறித்து தாம் பேச இருப்பதாகக் கூறினார்.

# துருக்கி நஷ்டஈடு கோருகிறது

(பனாமா)

பஹ்ரெயின் கரையருகில் ஏவுகணையால் நேற்று முன்தினம் தாக்கப்பட்ட எண்ணெய் கப்பலுக்கும், அதில் உயிரிழந்த மாலுமிகளுக்கும் நஷ்டஈடு கோரப்போவதாக துருக்கி அறிவித்துள்ளது.

அந்த எண்ணெய்க் கப்பல் டுபாய் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு ஈரானோ-ஈராக்கோ பொறுப்பேற்கவில்லை.

இதற்கிடையே ஈரானியபகுதியை நேற்றுமுன்தினம் ஈராக்கிய படைகள் தொடர்ந்து தாக்கிய போது ஈராக் இரசாயன குண்டுகளை பயன்படுத்தியதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தில் பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகவும் ஈரான் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

## 72 கிராமங்களுக்கு தொலைபேசி இணைப்புகள்

[புதுடில்லி]

ஹரியானாவிலுள்ள எழுபத்திரண்டு கிராமங்களில் எழுபத்திரெண்டு லட்சம் ரூபா செலவில் புதிய தொலை பேசி இணைப்பங்கள் ஏற்படுத்தப் படவுள்ளன.

இத்தகவல் இந்திய மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு, மிருசா நார்வானநகரில் நேற்று முன்தினம் சன்னியக்கத் தொலைபேசி இணைப்பகக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறினார்

### சுவீடன் பிரதமர் கொலை

# குற்றவாளிகள் மீது தீவிர வலை வீச்சு

(ஸ்ரொக்ஹோம்)

சுவீடனில் பிரதமர் திரு. ஒலேச்சப் பால்மேயைச் சுட்டுக்கொன்றவர்களைத் தேடும் பணிதொடர்ந்து நடைபெறுகிறது.

இதனிடையே பிரதமர் திரு பால்மேயை சுட்ட இடத்தில், அமெரிக்காவில் தயாரான ரிவோல்வரிலிருந்து சுடப்பட்ட ஒரேமாதிரியான புதுவகை செப்புமுனையுடைய இரு தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது சுவீடனிலுள்ள முக்கிய உறுப்பினர்களுக்கு மெய்காவல் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (பி)

## புதிய உப மின் நிலையம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் ஒரு உப மின் நிலையம் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது

இதற்காக யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின நல்லூர் உப அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைகளை திருநெல்வேலி காளிகோவிலடி சனசமுக நிலையத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## 18 லட்சம் பவுண் ஒதுக்கீடு

[புதுடில்லி]

உலக கிரிக்கெட் கிண்ணத் திற்கானப் போட்டி இந்தியாவில் அடுத்த ஆண்டு நடத்துவதற்காக பதினெட்டு லட்சம் பவுண் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. (பி)

## இலவச நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இன்று நாம்படும் அல்லல் நீங்கும் பொருட்டு அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் நல்லூர், பண்டாரக்குளம், மாருதவளவு அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 8ம் திகதி மகாசிவராத்திரியன்று இடர்களை பதிகம் என்னும் திருஞானசம்பந்தர் அருளிச் செய்த பதிகத்தினை நூல் வடிவில் இலவசமாக வெளியிடவுள்ளனர். இந்நூலை பெறவிரும்புகின்றவர்கள் மகா சிவராத்திரி தினம் மேற்படி ஆலயத்திலும் நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள மேற்படி மன்ற அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

# ஜூன் மாதத்தில் பிரதேச சபைத் தேர்தல்கள்!

(கொழும்பு)

உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலுள்ள பிரதேசசபைகளுக்கான தேர்தலை எதிர் வரும் ஜூன் மாதம் நடாத்த அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகின்றது

மேற்படி தேர்தல்கள் தொடர்பாக அரசாங்கம் இயற்றவிருக்கும் சட்டத்தின் பிரகாரம் மாநகரசபைகள். நகரசபைகள் ஆகியன இல்லாத இடங்களிலேயே 250 பிரதேச சபைகள் அமையவுள்ளன என மேலும் தெரியவருகின்றது

இப்பிரதேச சபைகளே உள்ளூராட்சி அமைப்புக்களில் ஆகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட சபைகளாக இருக்கும் அதேவேளையில் கிராமோதய மண்டலங்களைவிட உயர்ந்த மட்ட அதிகாரங்களைக் கொண்டு இயங்குமாம்.

கிராமோதய மண்டலங்களை உருவாக்குவதில் பிரதமர் ஆர். பிரேமதாஸா வகித்த பாத்திரம் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸ் நிலைமை வழமைக்கு திரும்பவில்லை

(மணிலா)

''பிலிப்பைன்ஸில் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ள போதிலும் முற்றிலும் கட்டுப்பாட்டில் இல்லை'' என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோ கூறினார்.

மணிலாவில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு கூறிய அக்கினோ, ''ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் பொறுத்துக்கொள்ளப் படமாட்டாது' என்றார்.

இதேவேளை திருமதி அக்கினோ மார்கோஸ் ஆட்சியின் போது தடை செய்யப்பட்ட சில மக்கள் உரிமைகளை மீண்டும் வழங்கியுள்ளார். (பி)

# 36 மாணவர்கள் இரத்ததானம்!

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி லியோ கழகத்தின் ஆதரவில் 36 மாணவ மாணவிகள் இரத்ததானம் வழங்கினர்.

யாழ் அரசினர் வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் இக் கல்லூரிக்கு நேரில் வருகை தந்து மேற்படி 36 மாணவ மாணவிகளிடமிருந்து இரத்தத்தைச் சேகரித்து சென்றனர். இதற்கான ஒழுங்குகளை கல்லூரி லியோ கழகத்தினர் செய்திருந்தனர்.

# பங்களாதேஷில் அடுத்தமாதம் தேர்தல்

(டாக்கா)

பங்களாதேஷில் அடுத்த மாதம் 26 ம் திகதி தேர்தல் நடைபெறும் என்று டாக்காவில் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கிடையே சில எதிர்க் கட்சியினர் நடத்திய ஊர்வலத்தில், ராணுவ ஆட்சியின் கீழ் தேர்தல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

டாக்கா பல்கலைக்கழகத்தில் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் உரையாற்றுகையில்; சுமார் 300 மாணவர்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்கள்.

பல்கலைக்கழக கட்டிடத்திற்குள் நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்யமுயற்சித்த மாணவர்கள் சிலரை பொலிஸார் கட்டுப்படுத்தினார்கள். (பி)

## மருந்துச்சாலை மூடப்பட்டது

[பண்டத்தரிப்பு]

பலாலியில் நீண்டகாலமாக இயங்கி வந்த அரசினர் மத்திய மருந்துச்சாலை மூடப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரையின் பேரில் இந்த மருந்துச்சாலை அண்மையில் மூடப்பட்டது

இப் பகுதி மக்கள் வைத்திய வசதியின்றி இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மருந்துசசாலையில் கடமையாற்றி வந்த வைத்திய அதிகாரி டாக்டர். சிதம்பரநாதன் மருந்துக் கலவையாளர் திரு நடராஜசிங்கம் ஆகிய இருவரும் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## வளர்மதி சனசமூக நிலையம்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின்வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நிலையத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: ச. வாமதேவன், செயலாளர்: பொ. துரைசிங்கம், பொருளாளர்: க. செல்வராசா மற்றும் 18 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவாகியுள்ளது,

## சனசமூக நிலைய கூட்டம்

[சாவகச்சேரி]

கைதடி நுணாவில் சன சமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6ம் திகதி நிலைய மண்டபத்தில், சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிர்வாகிகள் மத்தியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக சிலகாலமாக இதன் நிர்வாகம் செயற்படாமல் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது.

## மணிவாக்கு

வித்தின்றியாதும் விளைவதுண்டோநின்னருளாஞ்
சித்தின்றியாங்களுண்டோ செப்பாய்பராபரமே.

—தாயுமானவர்

## நமது நோக்கு

# தலைமன்னர் தொடக்கம் சுண்டிக்குளம் வரை

“கொழும்பு தொடக்கம் அல்மோரா வரை” என்றொரு நூல் உண்டு: அது சுவாமி விவேகானந்தர் ஆற்றிய ஆன்மீகப் பேருரைகளின் தொகுப்பு. இலங்கை தொடக்கம் வட இந்தியா வரை உள்ள நீண்ட நிலப்பரப்பை எல்லையாகக் கொண்ட எல்லையற்ற ஆனந்தமளிக்கும் சொற்பொழிவுகள் அவை.

இன்று நாம் குறிப்பிடும் தலையங்கம் அதனைப்போல ஒரு நூலின் தொகுப்போ என்ற சந்தேகம் சுவாமியின் நூலை வாசித்தவர்களுக்கு ஏற்படும்.

அவ்வித பேர்வழிகள் இன்று எம்மைப்போலமிகச் சிலரே. சம்சாரமென்னும் பெருங்கடலில் சிக்குண்டு தவிக்கும் மக்களுக்கு உலகம் கண்ட மெஞ்ஞானியின் தடைகளை எவ்வாறு தாண்டலாமென்ற அருளுரைகளுக்கும்; இலங்கையரசு இன்று தலைமன்னர் முதல் சுண்டிக்குளம் வரை மீன் பிடிக்க விதித்திருக்கும் தடைக்கும் என்ன சம்பந்தம் உண்டு?

விண்ணுலகின் அனுபவத்தை மண்ணுலகில் கண்டவர் விவேகானந்தர். தடைகளை மனிதன் எவ்வாறு தாண்டலாமென்பது சுவாமிகளின் பேருரையில் விளக்கப்பட்டிருக்கிறது.

நாம் இன்று தத்தளிப்பது இலங்கையின் வடபாகக் கடலில் ஏற்பட்டிருக்கும் இலங்கையரசின் தடை பற்றியே.

தலைமன்னர் முதல் சுண்டிக்குளம் வரை மீன் பிடிக்க இன்று தடையுத்தரவு பிறப்பிக்சப்பட்டிருக்கிறது.

இந்த நீண்ட கடற்பகுதி தமிழ் ‘பயங்கரவாதிகளு’க்கு ஆயுதபரிமாறலுக்கும், போர்ப் பயிற்சிக்கும், இடமளிப்பதால், மீனவர் நடமாட்டம் இதனை ஒழிக்கும் திட்டத்துக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது என்று பாதுகாப்பமைச்சர் விளக்கம் அளித்திருக்கிறார்.

இப் பிரதேசங்களில் வாழும் சுமார் இரண்டு லட்சம் பேர்கொண்ட எண்பதாயிரம் மீனவ குடும்பங்கள் இதனால் பாதிக்கப்படுமென யாழ். பிரஜைகள் குழு மதிப்பீடு செய்திருக்கிறது.

இப்பகுதி மீனவர் இன்று என்ன நிலையில் வாழ்கின்றனர் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை. இலங்கைக் கடற்படை இந்திய மீனவர்களைத் தாக்குவதில் பெருவெற்றி கண்டிருக்கிறது. இலங்கை வடபகுதி மீனவர்கள் எல்லோரும் தமிழர்கள் என்பதால் அரசின் கடற்பாதுகாப்பு வலயம் திறம்பட தொழிற்படவில்லை யென்ற கருத்து இப்புதிய தடைக்கு காரணமாகிறது.

இவ்வித சட்டம் முன்னரும் கொண்டுவரப்பட்டது. பட்டினியால் வாடிய மீனவர்கள் அக்கரையில் அகதிகளாக ஒதுங்கியது இன்று பழங்கதை.

இன்று மண்ணிலும் விண்ணிலும் நடத்தும் தாக்குதல்களால் உருப்படியான பலனடையவில்லையே என்ற விரக்தியில் கடற்போர்ஆரம்பமாகிவிட்டது.

மூன்று வருடமாக நடைபெறும் போரில் கண்ட மிச்சம் என்ன? தரையில் கொல்லப்பட்டவர் எல்லோரும் “பயங்கரவாதிகள்”- விமானத்தாக்குதல் பயங்கரவாதிகளின் முகாம்களை ஒழித்துவிடும் குறுக்குச்சூட்டில் [cross fire]சில அப்பாவி மக்கள் கொலைப்படுவதைத் தடுக்க முடியாது. இது உண்மையானால் ‘பயங்கரவாதம்’ ஒழிகின்றதா?

இல்லை என்பதால் இன்று கடல் போர் ஆரம்பமாகிறது. பெரிய கடற்படை இல்லையானாலும் இந்துசமுத்திர பிரதேசத்தில் இலங்கையை அசைக்கமுடியுமா? இந்தியா என்ன செய்யும்; அமெரிக்கன் போர்க் கப்பல்கள் அடிக்கடி வருவதும், பிரமாண்டமான அமெரிக்க போர் விமானம் “விஜயராஜாவைத்” தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு கொண்டு வந்ததையும் மக்கள் அறிவார்கள். எனவே கடலில் ‘வெற்றி’ கடைசி வெற்றி என்பது அமைச்சர் லலித் கொண்டிருக்கும் நம்பிக்கையாகலாம்.

எண்பதாயிரம் மீனவர் குடும்பங்கள்எவ்வாறு உயிர் வாழ்வது? இலங்கைக்கு அகதிகள் இன்னும் தேவையா? பட்டினியால் இப்பட்டாளம் மடியும் என்ற பயம் அரசுக்கு இல்லாதபடியால் இதனை இனக்கொலை என்ற தலைப்பில் சேர்த்துவிட முடியாது!

இந்தக் கடற்பரப்பு பயங்கரவாதிகளின் ‘விளைநிலம்’ என்பதால் என்ன வந்தாலும் அவர்களை ஒழிப்பதற்கு இதுவே இடம் என்ற பிடிவாதம் இன்று மீண்டும் ஏற்பட்டிருக்கிறது.

“‘பாஸ்பாஸ்’ என்றுவாகனங்களைக் கட்டுப்படுத்தும் உத்தி இன்று எவ்வாறிருக்கிறது? அதேம்பால் கடலைக் கிளீனுக்கும் முயற்சி எவ்வாறிருக்கும்?

எலிப்பட்டாளத்தால் அவஸ்தைப்பட்ட வீட்டுக்காரன் ஒருவனுக்கு நண்பன் கொடுத்த டோஸ் உடனடியாக நிவாரணம் அளித்தது; “கொளுத்தடா வீட்டை” என்பதே அந்த மருந்து.

எலி மட்டுமல்ல வேறெவ்வித தொல்லைகளும் அந்த வீட்டுக்காரனுக்கு அன்று தொடக்கம் இருக்கவில்லை என்கிறது கதை.

நிலம், நீர், ஆகாயம் என்ற மூன்று நிலையங்களிலும் முப்படையின் முயற்சிகளை விரிவாக்காது அரசியல் உத்திகளில் நம்பிக்கை கொண்டு நாட்டைக்காப்பாற்ற வழிகாண்பதே பயங்கரவாதத்தை ஒழிக்கவல்ல ஒரே வழி.

இதுவே உலகம் விரும்பும் வழியென்பது குறிப்பிடத்தக்கது.

# “விவசாயி, தொழிலாளிகள் இணையாத போராட்டம் வெற்றி பெறுது”

(யாழ்ப்பாணம்)

“கிழக்கு மாகாணத்தில் அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் விவசாயிகள் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்ட போதிலும் அதற்கு கண்டனம் தெரிவித்து ஊர்வலம் நடாத்த எந்த அமைப்பும் முன்வரவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் எது நடந்தாலும் எல்லோரும் திரண்டு ஊர்வலம், கூட்டங்களை நடாத்துகின்றனர். இது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னுக்கு கொண்டுவரப் போவதில்லை:”

இவ்வாறு மட்டுநகர் விவசாயிகள் மீதான வெறியாட்டத்தைக் கண்டணம் செய்து ‘கிராமித் தொழிலாளர் சங்கம்’ நடாத்திய ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கிராமியத் தொழிலாளர் சங்கத்தின் அமைப்பாளர் திரு.எஸ் கிருஷ்ணபிள்ளை கூறினார்.

புத்தூர் சிவன்கோவில் முன்றலில் நேற்று முன்தினம்நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கிராமியத் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதி திரு.து. காண்டீபன் தலைமை வகித்தார்.

சங்க அமைப்பாளர் திரு. கிருஷ்ணபிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்றுக் கொள்ள இன்று புறப்பட்டுள்ளவர்கள் கிழக்கு மாகாண விவசாயிகள் படுகொலை செய்யப்பட்ட போது அதனைக் கண்டித்து போராட்டம் நடாத்தவில்லை.

“விவசாயிகளும், தொழிலாளிகளும் இணையாத போராட்டம்எங்கும் என்றும் வெற்றி பெற்ற சரித்திரம் கிடையாது எனவேதான்கிராமியத் தொழிலாளர்களாகிய நாம் விவசாயிகளின், கூலித் தொழிலாளர்களின் படுகொலைகளைக் கண்டனம் செய்கிறோம். என்றார்.

தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த திரு, இ.ரவி தமது உரையில்:“புதிய வாழ்க்கை வாழ வேண்டியவர்கள் உழைக்கும் தொழிலாள விவசாயிகளே இம் மக்கள் தான் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இம் மக்கள் தான் போராட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டியவர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போராடும் சகல சக்திகளும் இதனை நன்றாக உணர வேண்டும்” எனறார்.

அடுத்து மட்டக்களப்புப் பிரதேசப் பிரதிநிதி திரு.எஸ் குமார் தமது உரையில்: “தொழிலாளர்கள், விவசாயிகள் நடாத்தும் போராட்டமே உண்மையான போராட்டமாகும். இத்தகைய போராட்டங்கள் மூலமே மக்களை விழிப்புக் கொள்ளச் செய்ய முடியும்” என்றார்.

இக் கூட்டத்திற்குத் தலைவகித்த திரு. காண்டீபன் தமது உரையில்,“தமது வேலியில் ஆபத்து வந்து விட்ட பின்பே ஒவ்வொருவரும் போராட முனைகின்றனர் இது எமது தமிழ் சமூகத்துக்குள்ள பெருங் குறைபாடாகும் கிழக்கு மாகாணத்தில் படுகொலை செய்யப்பட்ட விவசாயிகளுக்காக யாழ்ப்பாணப் பகுதியில் குரல் எழுப்பியவர்கள் யார்? இந்த வகையில் எமது கிராமியத் தொழிலாளர் சங்கமே முதன் முதலாக அந்த மக்களின் கொலைகளுக்கு கண்டன ஊர்வலத்த நடாத்தியுள்ளது” என்று கூறினார். [ஐ]

# பருத்தித்துறை நகரசபை அலுவலகம் இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தை பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டிடமொன்றிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

நகரசபை அலுவலகத்தை பருத்தித்துறை- தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டிடத்திற்கு மாற்றம் செய்வதற்கு பருத்தித்துறை பிரஜைகள் குழுவும் ஒத்துழைப்பு வழங்குமென பருத்தித்துறை பிரஜைகள்குழு அறிவித்துள்ளது:

கடந்த மாதம் 5ம் திகதி பருத்தித்துறை நகரில் நடைபெற்ற ஹெலிகொப்டர் பீரங்கி, மோட்டோ ஷெல் தாக்குதல்களையடுத்து பருத்தித்துறை நகரசபை அலுவலகம் மூடப்பட்டது. இதன் பின்னர் நகரசபைஊழியர்கள் கடமைக்கு அலுவலகத்திற்கு செல்ல அஞ்சியதால் தொடர்ந்தும் பருத்தித்துறை நகரசபை அலுவலகம் மூடப்பட்டிருக்கின்றது. இதனால் நகரின் சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் உட்பட்ட பல முக்கிய சேவைகள் ஸ்தம்பித்திருக்கின்றன.
றன.

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தை இயங்கச் செய்து ஸ்தம்பித்திருக்கும் சேவைகளை வழமைக்குக் கொண்டுவர பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தை இடம்மாற்றவேண்டியது அவசியம் எனச்சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து பருத்தித்துறை பிரஜைகள்குழு நகரசபை அலுவலகத்தை இடம் மாற்ற வேண்டுமெனத்தீர்மானித்தது, இவ் அலுவலகத்திற்கான கட்டிடத்தை பல இடங்களிலும் பார்வையிட்டு தற்பொழுது பருத்தித்துறை தும்பளை வீதியிலுள்ள தனியார் கட்டிடமொன்றே வசதியானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டிடத்திற்கு நகரசபை அலுவலகத்தை இடம்மாற்றுவது பற்றி பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. எஸ். பத்மநாதன் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார் விரைவில் பருத்தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித்துறை - தும்பளை வீதியில் 4ம் குறுக்குத்தெரு சந்திக்கும் மணல் ஒழுங்கைச் சந்திக்கும் இடையில் உள்ள இத்தனியார் கட்டிடத்தில் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# இவையனைத்தும் இப்போது கிளிநொச்சியில்

[கிளிநொச்சி]

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்துடன் இருந்து வந்த கிளிநொச்சிப்பகுதிக்கான சிறு கைத்தொழில் இலாகா வேலைகள் அனைத்தும் இப்போது கிளிநொச்சி கச்சேரியில் தனித்து இயங்க ஆரம்பித்துள்ளன. இதே போல் சமூகசேவைகள் திணைக்களமும் தனியாக இயங்கி வருகிறது. அத்துடன் புனர்வாழ்வுப்பிரிவும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரான திரு. சொக்கலிங்கம் - அமிர்தலிங்கம், கிளிநொச்சிப் பகுதிக்கான சிறு கைத்தொழில் இலாகா உதவி அத்தியட்சகராகவும், சமூக சேவைகள் உதவி அத்தியட்சகராகவும், புனர்வாழ்வுப்பகுதி உதவி ஆணையாளருமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறு கைத்தொழில் இலாகா வேலைகள், அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள், சமூகசேவைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் என்று திரு அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் தெரி த்தார்.

# கிழக்கின் துயரைக்கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

[யாழ்ப்பாணம்]

கிழக்கு மாகாணத்திலுள்ள உடும்பன் குளம், தங்கவேலாயுதபுரம் ஆகியபகுதிகளில் உள்ள தமிழ், முஸ்லிம் விவசாயிகளை இராணுவம் சுட்டுக் கொன்றதற்கும், பெண்களை கற்பழித்ததற்கும் கண்டனம் தெரிவிக்கும் வகையில் ‘கிராமியத் தொழிலாளர் சங்கம்’ மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நேற்று முன்தினம் நடத்தியது.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல விவசாயப் பகுதிகளிலிருந்தும், கிராமப்புறங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்.

நீர்வேலி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்த இவ் ஊர்வலம், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் போன்ற பல பகுதிகளிலுமுள்ள விவசாயக் கிராமங்களினூடாக சுமார் பத்து மைல் வரை சென்று இறுதியில் புத்தூர் சிவன் கோவிலடியில் முடிவுற்றது.

கிராம விவசாயிகள், தொழிலாளர்கள் ஊர்வலத்துக்குப் பெரும் ஆதரவு நல்கினார்கள். பல இடங்களில் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களுக்கு தாகசாந்திக்கான குளிர் பானங்கள் வழங்கப்பட்டன.

இவ்வூர்வலத்தில் கலந்து கொள்வதற்காக கைதடியிலிருந்து மினிவானில் மக்கள் புறப்பட்டுவந்து கொண்டிருந்தபோது கைதடிப் பாலம் உள்ள பகுதியில் தாழப்பறந்து ஹெலிகொப்டர் சுட்டதாயினும் எவருக்கும் காயமேற்படவில்லை புறப்பட்ட மக்கள் ஊர்வலத்தில் வந்து கலந்து கொண்டனர்.

ஊர்வலம் புத்தூர் சிவன் கோவிலடியைச் சென்றடைந்தும் அங்கு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் கிராமியத் தொழிலாளர் சங்கத்தின். பிரதிநிதிகள் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

[ஐ]

# அளவெட்டியில் ‘அந்த’ விமானம்!

(யாழ்ப்பாணம்)

சத்தமில்லாத மர்ம விமானம் நேற்று காங்கேசன்துறை பக்கமாக இருந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாம் இதனால் பன்னாலை அளவெட்டி கிராம மக்கள் மிகவும் மனக்கிலேசம் அடைந்து பயந்த நிலையில்வாழ்கின்றனர்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

முதிரை நிலை, கதவு, யன்னல் வேறு யன்னல்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு எல்லா நாட்களும் காலை 8-30 மணிக்கு முன்பு பார்வையிடலாம். த. சங்கரப்பிள்ளை 209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1049)

### தவறிவிட்டது

கிட்டத்தட்ட ரூபா 5600/- காசு யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் வீரகாளி அம்மன்கோவிலுக்கும் சிவப்பிரகாசம் வீதிக்குமிடையில் இன்று பிற்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். J. E. இராஜநாயகம். 55, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் அல்லது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, 330, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1060)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
உயர்திரு சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள்
(இளைப்பாறிய பிரதம இலிகிதர்)
(Retired hospital Chief clerk)



தோற்றம்;- 13-03-1916
மறைவு:- 03-02-1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் உயரவைக்க அயராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! நீங்கள் மறைந்தும் மறையாத ஒளியாய் எங்கள் உள்ளத்தில் இருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வீட்டுக் கிரியை நாளை (05-2-86) காலை 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் சமூகந்தந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(C1055)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீட மீள் பரீட்சை-1986

அடிப்படைக்கணிதம், ஆங்கிலம் ஆகிய முதலாம் ஆண்டு மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மார்ச் மாதம் 2. ஆம் திகதிக்குமுன்பாக தமது விண்ணப்பப்படிவங்களை அதற்குரிய பணத்தையும் செலுத்திப் பூர்த்தி செய்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர், தேர்வுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இப்பரீட்சையானது ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும்.

பதிவாளர்
(A 321)

## உன்னைப் பிரிந்த 41-ம் நாள்!

இ. இராசேந்திரன்



அன்னையின் மடியில்: 26-06-1964

தந்தையர் பூமியில்: 23-01-1986

விதிதீர்க்கும் சமரில் பலியானீர் நீர், வேட்பின்றி மக்கள்பால் கொண்ட அன்பால் இயன்றவை யாவும் ஈந்தீர் அவர் வாழ்வு, மானம், விடுதலைக்காய்!

உனது ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கும்:

அப்பா க. இராசையா,
அம்மா இராசமணி,
தங்கைமார், தம்பி,
பேரன், பேத்தி,
உறவினர்.

மாவை கலட்டி.
04-03-1986. C 1053

## லிடோ சினிமா

10-30, 2-30, 6-30
கல்யாணகுமார்- தேவிகா நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
புதிய பிரதி

## வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ் நடித்த
ஆனந்த ராகம்
(புதிய பிரதி கலர்)

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருவாளர் தம்பிப்பிள்ளை சிவசம்பு



மலர்வு: 10-02-1928
உதிர்வு: 12-01-1986
திதி: 04-03-1986

அமரத்துவம் அடைந்த எம் குடும்பத்தலைவர் அவர்களின் ஈமக்கிரியைகளிற்கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் ஆத்ம சாந்திக்கிரியையில் பங்கு பற்றுபவர்களுக்கும் எங்கள் மனமார்ந்தநன்றியைத் தெரிவிக்கிறோம். 04-03-1986 செவ்வாய்க்கிழமைஅன்னாரின் இல்லத்தில் ஆத்ம சாந்திக்கிரியை நடைபெறும். எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

'கிரிவாசா'
கிரிசிட்டி வீதி,
காங்கேசன்துறை.
C 1059

## மகள்முன்னிலையில்...

[(1 ம் பக்கத் தொடர்ச்சி]

கிட் பிரயோகத்தில் சைக்கிளில் வந்த ஒருவர் மரணமானார்!

முத்துலிங்கம் தெய்வேந்திரன் [33 வயது - 2பிள்ளைகள்] என்ற மேற்படி விவசாயி, சுகவீனமுற்றிருந்த தனது மகளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வதற்காகச் சைக்கிளில் கூட்டி வந்தபோதே கனகராயன் குளத்தில்வைத்து ராணுவத்தினரால் சுடப்பட்டார்.

## எம்பயர் திரையில்

10-30, 2-30, 6-30,
மோகன் - நளினி
சட்டத்தை திருத்துங்கள்

## கண்ணிவெடி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பம்பைமடுவில்

''வவனியா, செட்டிகுளம் இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை கவசவண்டிகள் சகிதம் நடந்துசென்ற 150 இராணுவத்தினர் பம்பைமடுக் கிராமத்தை சுற்றிவளைத்தனர். இவர்களுக்கு உதவியாக ஐந்து ஹெலிக்காப்டர்கள் அக்கிராமத்தின் மேல் வட்டமிட்டுப் பறந்தவண்ணமிருந்தன'

'தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலால் ஹெலிகொப்டர் ஒன்று சேதமடைந்தது'' என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(மா)

## முக்கிய அறிவித்தல்

காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவகுருவின் சொத்துக்கள் வியாபார ஸ்தாபனங்களாகிய அராலி சுருட்டுத் தொழிற்சாலை, சிவகுரு ஸ்ரோர்ஸ் 366, பிரதான வீதி, மாத்தளை ஆகியனவற்றின் உரிமைக்காக அவரது இரண்டாவது புத்திரன் சி. சிவகுமாரனால் (மூளாய் தெற்கு, சுழிபுரம்) அவரது மூத்த சகோதரருக்கு எதிராக சி. சிவசோதி (மூளாய் தெற்கு, சுழிபுரம்) தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நம்பர் (காசு 1443) யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறுவதால் திரு. சிவசோதியிடமிருந்து சொத்துக்கள் எதனையும் கொள்வனவு செய்யவேண்டாமென்று இத்தால் அறியத்தருகிறேன்.

சி. சிவகுமாரன்

[C 1057]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

செல்வன் இந்திரன் இராசையா



தோற்றம்: 22-11-1976
மறைவு: 02-02-1986

வானத்து வண்ணத் தாரகை ஒன்று நிலத்திடை வீழ்ந்த அந்த வெற்றிடத்தை நிரப்ப வெண்ணி வானமகள் உன்னை அழைக்கனளோ -நீ வான் வெளியில் கலந்தனையோ! ஏன்? மோனத்துயில் கொண்டாய் மோகன கீதம்பாடி மகிழ்ந்திருந்த வேளையிலே எமை மட்டும் முகாரி பாடவைத்து நீ மௌன கீதம் இசைப்பதெனனை...?

எங்கள் அன்புச் செல்வன் இந்திரனின் அபரக் கிரியையின்போது நேரில் கலந்து கொண்டோர், அனுதாபம் தெரிவித்தோர், அஞ்சலி உரை நிகழ்த்தியோர், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், மற்றும் பல வழிகளில் உதவகள் புரிந்த அனைவர்க்கும் எங்கள் நன்றியறிவித்தலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அக்கா,
அண்ணா, உறவினர்,
நண்பர்கள்.

'மலர்மசள்'
அல்வாய் மேற்கு,
அல்வாய். C 1058

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருவாளர் சுப்பிரமணியம் வேல்முருகு



மலர்வு: 22-12-1913
உதிர்வு: 03-0?-1986
திதி: 05-03-1986

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரும் எம்.பி. வீரவாகு கம்பனி ஸ்தாபகருமான திரு சு. வேல்முருகு அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (5-3-1986) புதன்கிழமை புலோலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்மசாந்திக் கிரியைகளில் பங்குபற்றி ஆத்ம சாந்திக்காகபிரார்த்திப்பதுடன், மதியபோசனத்தில் பங்குகொள்ளுமாறு ஊரார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், மற்றும்
குடுப்பத்தினர்.

கந்தமுருகேசனார் வீதி
பல்லப்பை
புலோலி தெற்கு,
புலோலி. C 1056

## உருக்கமான வேண்டுகோள்

7-2-86 அன்று பிற்பகல் 6-30 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கி வந்துகொண்டிருந்த இல: 26 ஸ்ரீ 6162 [சேவ்ரி] லொறி இனந்தெரியாத நபர்களால் நுணாவில் சந்தியில் திசை திருப்பப்பட்டு அதிலிருந்த பொருட்கள் யாவும் கடத்தப்பட்டன. அப்பொருட்கள் யாவும் பொதுமக்களாகிய எமதே. நாங்கள் மிகுந்த கஷ்டத்துடன் உழைத்துவந்த பொருட்கள் எமது இடத்தில் வைத்துக் கடத்தப்பட்டது மிகவும் வேதனைக்குரிய செயலாகும். இற்றைவரை நாம் எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. ஆகையால் புனிதமான இயக்கங்கள் இதில் தலையிட்டு எமது பரிதாபநிலையை உணர்ந்து எமது பொருட்களை மீட்டுத்தருமாறு பணிவன்டன் கேட்டுக்கொள்கின்றோம் லொறி உரிமையாளரிடமிருந்து எதுவிதவிசாரணைகளையோமேற்கொள்வதற்கு கீழ் ஒப்பமிட்டவர்களாகிய நாங்கள் பூரண ஒத்துழைப்புத் தரக் காத்திருக்கின்றோம்

-- பொருள் இழந்தோர்

[1] க. விஜயகுமார், [2] பா. லோகப்பிரகாசம், [3] க சுந்தரலிங்கம், [4] க. கருணாகரன், [5] ஆ க. சிவனேஸ்வரன், [6] எ. அந்தோனிஐயா
[A 322]

# "குண்டுச் சத்தம் மத்தியிலும் மாணவர் கல்வி தொடரவேண்டும்"

## — கல்விப்பணிப்பாளர்

(பண்டத்தரிப்பு)

"மாணவர்கள் எந்தகட்டத்திலும் நெஞ்சில் உரமிக்கவர்களாகவும், நேர்மைத் திறன் மிக்கவர்களாகவும் விளங்க வேண்டும். குண்டுச்சத்தங்கள் கேட்டாலும் தளராது தமது கல்வியை தொடரவேண்டும். மாணவசமுதாயம் ஒன்றுபட்டு தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் மன வலிமை, உடலுறுதி ஆகியவற்றை பெறுவதற்கும் இது போன்ற மெய்வல்லுநர் போட்டிகள் பெரிதும் உதவும்."

இவ்வாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் இளவாலை புனித ஹென்றியரசர்கல்லூரி, இளவாலை கொன்வென்ட் மகாவித்தியாலயம் ஆகியன ஒன்றிணைந்து நடாத்திய வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டிகளுக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார் தலைமைவகித்தார். இளவாலை கொன்வென்ட் மகாவித்தியாலய அதிபர் சங். சகோதரி. எப். விற்றர் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:

"மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றிலும் சிறந்து விளங்கவேண்டும். வகுப்பறைக் கல்வியுடன் தமது கல்வி பூரணத்துவம் அடைந்து விடுவதாக மாணவர்கள் கருதக் கூடாது. மாணவர்கள் வகுப்பறையில் ஒரு நாளைக்கு ஆறு மணித்தியாலமே கற்கின்றார்கள். ஆனால் வீடுகளில் இவர்கள் மிகுதி 18 மணித்தியாலத்தையும் செலவிடுகின்றார்கள். இதனால் பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகளை நல்வழிப் படுத்தும் பொறுப்பு இருக்கின்றது"

கல்லூரி அதிபர் அருட்திரு. அன்ரன் இராசநாயகம் தமது தலைமை உரையில்; புதிதாக பதவி ஏற்ற யாழ்.பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தமது முதலாவது பொது நிகழ்ச்சியாக இந்ப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்துகொள்வது குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், நன்றி கூறுவதாகவும், இருகல்லூரிகள் ஒன்றிணைந்து இப் போட்டியை இன்று சிறப்பாக நடத்த ஒத்துழைத்த சகலருக்கும் தாம் நன்றிகூறுவதாகவும் குறிப்பிட்டார்,

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி ஜே. சுந்தரலிங்கம் வழங்கினர். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் வில்லி இல்லம் 160 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றது. கொன்வென்ட் மாகவித்தியாலய இல்லங்களுக்கான போட்டிகளில் லாறட்ஸ் இல்லம் 136 புள்ளிகளைப்பெற்றுமுதலாமிடத்தை பெற்று வெற்றியீட்டியது.

---

# பரமஹம்ஸர் ஜெயந்தி தின பேச்சுப்போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு ஸ்ரீராமகிருஷ்ணாலயத்தால்திருநெல்வேலியில் வதியும்மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிக்கு செல்வி ஏ சுந்தையா, திரு ஏ. சரவணமுத்து, திரு.கே தம்பிஐயா, திரு எஸ். ரி. கிருஷ்ணகுமார், திரு. க. சிவபாதவிருதயர், த. கணேசபிள்ளை, சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். போட்டி முடிவுகள் வருமாறு:

**கீழ்ப்பிரிவு— பெண்கள்**

1 ம் இடம் செல்வி சி. காஞ்சன, யா. இ.த க.பாடசாலை, திருநெல்வேலி, 2 ம் இடம் செல்வி பா. சுதர்ஷினி யா. இ ம.ஆரம்பப் பாடசாலை, 3 ம் இடம் செல்வி இ. மைத்திரீ யா. இ. த. க.பாடசாலை, திருநெல்வேலி., செல்வி ச. விஜிதா யா. சுண்டிக்குளி, மகளிர் ஆரம்பப் பாடசாலை

**கீழ்ப்பிரிவு ஆண்கள்**

1-ம் இடம் செல்வன் சி நிருத்தன், யா.சென் ஜோன்ஸ் பொஸ்கோ, 2 ம் இடம் செல்வன் எஸ் அகிலன் யா.இ.த. க.பாடசாலை, திருநெல்வேலி, 3 ம் இடம்செல்வன் ஜெ.தீபன் அட்லஸ் கல்விநிலையம், திருநெல்வேலி.

**மத்திய பிரிவு பெண்கள்**

1ம் இடம் செல்வி.இ.மாலதி யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 2 ம் இடம் செல்வி ஞா. மேரிஷைலா யா/இ.த.க பாடசாலை, செல்வி க.வனிதா,யா/இ.த க.பாடசாலை,செல்வி சு. சித்திரா யா/மு ம வித்தியாலயம்.

**மத்தியபிரிவு ஆண்கள்**

1ம இடம் கே.கிரிதரன்,யா/கொ.இ.கல்லூரி, 2 ம் இடம் இ.ஸ்ரீராகவன், யா/இ. த. க பாடசாலை,3 ம் இடம் க. சேரலாதன், யா/இ த. க பாடசாலை, ஆ.ஜனார்த்தனன், யா/இ. த.க பாடசாலை.

**மேற்பிரிவு பெண்கள்**

1 ம் இடம் செல்வி சி. சுகன்யா,யா/கன்னியர் மடம் மகாவித்தியாலயம், 2 ம் இடம் செல்வி பா. பாலகுமாரி யா/சொ.இ.கல்லூரி, 3 ம் இடம் செல்வி செ.தயாநிதி யா/மு. ம.வித்தியாலயம், செல்வி ஆ. தேவராணி யா/மு.ம. வித்தியாலயம், செல்வி இ. பத்மலோஜினி,யா/மு.ம. வித்தியாலயம்.

---

## பாடசாலைக் கிரிக்கெட் போட்டிகள்:

# சென். ஜோன்ஸ் கோஷ்டி சென். பற்றிக்ஸை வென்றது!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே தற்போது நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகளின், கடந்தவாரம் நடைபெற்று முடிந்த போட்டிகளின் விபரம்:

கடந்தவாரம் நடைபெற்ற போட்டிகளில், சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாகவும். ரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது, குறிப்பாக இருகோஷ்டிகளின் தலைவர்களும் தமது பொறுப்பை உணர்ந்து, சிரமமான நேரத்தில் சாதுரியமாக விளையாடியது பாராட்டுதற்குரியது.

### சென். ஜோன்ஸ் வெற்றி

இபபோட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 186 ஓட்டங்களைப் பெற்றது காப்டன் ஏ. வாகிசன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களையும், ஜி. பி ஜெயவீரசிங்கம் 43 ஓட்டங்களையும் பெற்றனர் பி. ஆதவன் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஏ எஸ் ஜெயக்குமார் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்

சென். பற்றிக்ஸ் கல்லூரி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 147. ஓட்டங்களைபபெற்றது காப்டன் எஸ் ஏ கிளஸ்ரன் மின்னல் வேகத்தில் 68 ஓட்டங்களை எடுத்தது சிறப்பம்சமாகும். ஜி எஸ். சவரிமுத்து 34 ஓட்டங்களைப் பெற்றார். என் ரகுராமும், எம் நிகாலும் முறையே 3,2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

ஆட்ட இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 2 விக்கெட்டுகளாலும், 39 அதிகப்படியான ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### யாழ். இந்து வெற்றி

யாழ். இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்து சிறப்பாக விளையாடி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 41ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பற்றது. என். நித்தியராஜா 23 ஓட்டங்களைப் பெற்றார். பி. பிரபானந்தனும், எஸ். உமையாளனும் முறையே 3.2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

யாழ். இந்துக்கல்லூரி 46 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்றது காப்டன் எஸ். இராமகிருஷ்ணன் 31 ஓட்டங்களையும், பி. பிரபானந்தன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டி, யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### மத்திய கல்லூரி மீண்டும் வெற்றி

யாழ். மத்திய கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் ல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் மத்திய கல்லூரி 29 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்தெடுத்தாடிய மத்திய கல்லூரி 41 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். விஜயநாதன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைப் பெற்றார். எஸ். கிருபானந்தன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கொக்குவில் இந்து 39ஓவர்களில் சகல விக்கெட்டுகளையு. இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. வி விமல்ராஜ் 38 ஓட்டங்களைப் பெற்றார். ஏ சிவச்சந்திரன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இப்போட்டி கொக்குவில் இநதுக் கல்லூரி மைதகனத்தில் நடைபெற்றது.

### யாழ். வளாகம் வெற்றி

யாழ் பல்கலைக் கழகத்துக்கும், ஜொலிஸ்டாஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். பல்கலைக் கழகம் வெற்றிபெற்றது.

யாழ். பல்கலைக் கழகம் 42 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 170 ஓட்டங்களையும், ஜொலிஸ்டாஸ் கழகம் 27 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும்இழந்து 438ஓட்டங்களைப் பெற்றது.

### சென்ரலைட்ஸ் வெற்றி

யாழ். சென்ரலைட்ஸ் கழகத்துக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சென்ரிலைட்ஸ் இலகுவாக வெற்றி பெற்றது.

சென்ரலைட்ஸ் கழகம் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 283 ஓட்டங்களையும், மானிப்பாய் இந்து 39 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

---

## தலைவர் கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக் தற்போது, விளையாட்டுக் கழகங்களிடையே 9-பேர் பங்குபற்றும், தலைவர் வெற்றிக்கிண்ணத்துக்கான "நொக்அவுட்" உதைபந்தாட்டப் போட்டி, தற்போது கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இப்போட்டியின் ஆரம்ப நாளன்று. யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ்தம்பதிகள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டனர்.

முதல் நாள் போட்டியில் நவாந்துறை சென். நீக்கிலஸ் கழகம், அல்லைப்பிட்டி பிலிப்ஸ் கழகத்தை 3—0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு எஸ். அமிர்தநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் கழகம், குருநகர் புனிதவளன் கழகத்தை 1—0 கோலால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு டி. ஏ எம். குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

குருநகர் பாடும்மீன் கழகம், பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகத்தை 1—0 கோலால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை மத்திஸ்தம் வகித்தார். [வி]

---

## நவாலி வை. எம். சி. ஏ

[சுண்டுக்குளி]

வை. எம. சி. ஏயின் 9வது வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் திரு ஜே. ஐ தம்பிராசா தலைமையில்வை, எம். சி. ஏ மண்டபத்தில் நடை பெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஜே. ஐ. தம்பிராசா உப தலைவர்கள்: ஜே பி. அருமைநாயகம் ஜோசேப் கௌரவ செயலாளர்: ஜே. கிருபைநாயகம் பொதுச்செயலாளர்: என். அன்ரராசா பொருளாளர்: வே. சபாரத்தினம் இளைஞர்பணி இயக்குனர்: டபிள்யூ. என், தேவகடாட்சம் கணக்குப்பரிசோதகர்;- ஏ மரியநாயகம் இத்துடன் 7பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## கரப்பந்தாட்டம் சென். நீக்கிலாஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அனுசரணையுடன், விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில், நாவாந்துறை சென். நீக்கிலாஸ் விளையாட்டுக் கழகம் சாம்பியன் கேடயத்தை தட்டிக் கொண்டது

யாழ்ப்பாணம் றிம்மர் விளையாட்டுக் கழகத்துக்கும், சென் நிக்கிலாஸ் கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற சம்பியன் மோதலில் சென். நீக்கிலாஸ் கழகம் 15 - 11. 5 - 15, 15 - 2 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது

சென். நிக்கிலஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற இச் சாம்பியன் மோதலுக்கு. திரு. கே ஏகாம்பரம் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

---

மாலை:

5 00 செய்தி
5-05 பாடசாலை விஞ்ஞானம் (தமிழ்)
5-30 'கறுப்புக்குதிரை' (ஆங்கிலம்)
6-00 சிங்கள நிகழ்ச்சி
6-15 'ரடின் தொடின்' (சிங்களம்)
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 இசை நிகழ்ச்சி
7-15 'தட்ஸ் இன்கிறிடிபிள்'
8-00 செய்திகள் [சிங்களம்]
8-20 தட்ஸ் இன்கிறிடிபிள் [தொடர்]
8-45 இசை நிகழ்ச்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 இசை நிகழ்ச்சி
9-45 'த சலிவன்ஸ்'
10-35 ஒளிபரப்பு முடிவு

---

## நலன்புரிச்சங்க அலுவலக திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியின் நோயாளர் நலன்புரிச்சங்க அலுவலகத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும். ரோட்டரிக்கழகத்தால் இவ்வலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியர் இக்கட்டிடத்தை திறந்து வைப்பார்.

வைத்தியகலாநிதியும் யாழ். ரோட்டரிக்கழகத்தைச் சேர்ந்தவருமான ஜெகா பசுபதி மங்கல விளக்கேற்றி வைப்பார். வைத்திய கலாநிதி எஸ் சிவகுமாரன் உட்பட உட்பட இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பெரியார்கள் ஆசியுரை வழங்குவர். [மா]

## விமானக் குண்டுவீச்சு:
# மனித உயிர்களை மதிக்காத இலங்கை அரசின் செயல்

(சுன்னுகம்)

''மனித உரிமைகளை மதிக்காத இலங்கை அரசின் உச்சகட்டமாக அப்பாவித் தமிழர் மீதுமேற்கொள்ளப்படும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இத்தகைய மனிதாபிமானமற்ற தாக்குதல்களை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்''.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுன்னுகம் பிரஜைகள் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இதுவும் ஒன்ருத .

''அரசு எந்த நொண்டிச் சாட்டு முகாந்திரத்திலும் இத்தாக்குதல்களை நடத்திஞலும் தமிழரை முற்றுமுழுதாக இல்லாதொழிக்கும் இனப்படுகொலைநோக்குடனேயே இவற்றினைச் செய்துவருகின்றது என்ற உண்மையை உலக நாடுகளுக்குப் பகிரங்கமாகத் தெரியப்படுத்த நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்'' என மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிதொரு தீர்மானம் கூறுகிறது.

முன்னுள் கல்விப் பணிப்பாளர் திரு. சி. மாணிக் வாசகர் தலைமையில் மேற்படி குழுவின் செயலவைக் கூட்டம் நடைபெற்றது.

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

யாழ். பிரதேச சுகாதாரப் பிரிவில் மாவட்ட மருந்தாளராக கடந்த ஏழு வருடங்களாக கடயையாற்றிய திரு வி. முருகேசம்பிள்ளை இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு காசநோய் தடுப்பு தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

[புலோலி]

மட்டக்களப்பு அபிவிருத்திச் சபை கொக்கட்டிச்சோலை உப- அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு எக்ஸ் எம். சர்வானந்தன் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப- அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## சமூகவிரோத செயலைக்
# கண்டித்து பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்கள் மத்தியில் இப்போது பெரும் பொருளாதார கலாசார அழிவுகளை ஏற்படுத்துவதில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையுமே முன்னணி வகிக்கின்றது.''

இவ்வாறு கட்டுவன் மேற்கு விழிப்பு மன்றம் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''சமூக விரோத செயல்களை கண்டிக்கிறோம்'' என்ற தலைப்பிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கசிப்பு உற்பத்தியாலும் விற்பனையாலும் எமது மக்களின் பொருளாதார அழிவு மட்டுமல்லாது உயிர் சேதங்களும் ஏற்படுகின்றன. பொருளாதார அழிவுகள் கலாசார சீரழிவுகள் எனும்போது அன்ருட வாழ்க்கையை நடாத்துவதற்கே போதாத வருமானம் பெறுவோரும் இம்மதுப் பழகத்திற்கு அடிமையாவதால் தமது குடும்பத்திற்குரிய உணவு உடை, கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளை செவ்வனே நிறைவு செய்ய முடியாத நிலை அக்குடும்பத்திற்கு ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாது இம்மதுப்பழக்கத்தில் தந்தைக்குப் பின் தனயன் என்பது போல மரபு வளர்கின்றது. அதாவது எமது வருங்கால சந்ததியினராகிய சிறு பிள்ளைகளும் தமது தந்தையரின் இக்கொடிய பழக்கத்தைக் கைக்கொள்ளுவதை கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதனை உற்பத்தி செய்பவர்கள் தமக்கு வேறு தொழில் செய்ய முடியவில்லை என்ற காரணத்திஞலேயே தாம் இதனை செய்வதாக கூறுகின்ருர்கள். இது நியாயமற்றது என்பதை வருத்தத்துடன் கூறுகின்ருேம். ஏனெனில் இக்கசிப்பு உற்பத்திக்கு முதலிடும் பணத்தைக் கொண்டு நன்மை பயக்கும் வேறு தொழிலை மேற்கொள்ளலாம் இது உண்மை.

இதனை உற்பத்தி செய்யும் கொடியவர்களின் இச் சமூக விரோத செயலால் பெரும்பான்மையான கூலி உழைப்பாளி வர்க்கத்தினர் தமது சொத்தையும், உயிரையும் ஏன் தமது சந்ததியையுமே அழிக்கின்ருர்கள். இந் நிலையில் எமது விழிப்பு மன்றமானது கிராமங்ளில் தோன்றும் சீரழிவுக்கு ஏதுவாகும் கசிப்பு மற்றும் சட்டவிரோத செயல்களை நிறுத்தக்கோரி மக்கள் மத்தியில் எடுத்திருக்கும் இப்போராட்டங்களுக்கு மக்களும் ஏனைய பொது ஸ்தாபனங்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்ருேம்''. ['மா]

## மார்ச் மாத
# தபாலக ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதத்துக்குரிய தபாலக ஓய்வூதியம் பின்வரும் திகதிகளில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 13-ம் திகதி அளவெட்டி. அச்சுவேலி, காரைநகர், வேலணை, சங்கானை.

14-ம் திகதி: யாழ்ப்பாணம், சுழிபுரம். கொடிகாமம்.

17-ம் திகதி: நெடுந்தீவு, அனலைதீவு, நயினுதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை.

18-ம் திகதி: பருத்தித்துறை, கொக்குவில் காங்கேசன்துறை

19ம்திகதி வட்டுக்கோட்டை யாவிளான் மானிப்பாய் உரும்பராய்

20 ம் திகதி கரவெட்டி வல்வெட்டித்துறை கைதடி வண்ணுர்பண்ணை

21ம் திகதி சாவகச்சேரி சுன்ஞகம் பண்டத்தரிப்பு

24 ம் தி தி தல்லிப்பழை கோப்பாய், யாழ்ப்பாணம்-

## சுற்றுடல் பகுதியில் தொடர்ந்து பதற்றம்!

[மாவிட்டபுரம்]

பலாலி இராணுவ முகாம் சுற்றுடல் பகுதிகள் தொடர்ந்தும் பதற்றத்திற்குரிய பிரதேசமாக விளங்கிவருவதால் அப்பகுதியிலும், அதையடுத்த கிராமங்களிலும் பதற்றம் நீடித்துவருகிறது.

மேற்படிமுகாம் சுற்றுடலில் தினமும் ஹெலிகொப்டர் ரோந்தும், துப்பாக்கி வெடிச்சத்தங்களும், குண்டுச்சத்தங்களும் இடம்பெற்று வருவதால் மக்கள்பெரிதும் பீதியடைகின்றனர்.

பெருந்தொகையானவர்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறியதால் வீடுகளும் விவசாய நிலங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் கேட்கும் சத்தங்கள் அயற்கிராமங்களிலுள்ள மக்களின் நிம்மதியைக குலைத்துவருவதாகவும் இதனுல் அவர்கள் அன்ருட வாழ்க்கையை பதற்றத்தின் மத்தியிலேயே கழிக்கவேண்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## காங்கேசன் பிரஜைகள் குழு
# நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பிரஜைகள்குழு பொதுமக்களின் நன்மைகருதி ''உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்'' என்னும் தலைப்பில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தற்சமய சூழ்நிலையில் வன்செயல்கள் அதிகரித்து வருவதால் அவ்வாருன சந்தர்ப்பங்களில் மக்கள் தம்மை எப்படி காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைகள் இப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக விமான தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன அத்துடன் மக்களுக்கு மேலும் கஷ்டங்கள் ஏற்படும் விதத்தில் வர்த்தகர்கள், முதலாளிகள் வசதியுள்ளவர்கள் நடந்துகொள்ளவேண்டாமெனவும் பொதுப்பணிக்கு உதவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

## ஓய்வு பெற்ருர்

(புலோலி

பருத்தித்துறை தபால்நிலைய பிரதம தபால் தரம் பிரிப்பாளர் திரு வீ. எஸ் சிவகுருநாதன், 35 வருட அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் ஆலய முகாமையாளரான திரு சிவகுருநாதன்சிறந்த சமூகசேவையாளருமாவார்

பருத்தித்துறை தபால்நிலையத்தில் தபால் சேவகராகக் கடமையாற்றிய திரு சி கனகசபையும் 35 வருட அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

# சுதுமலை தாவடி மக்கள் பீதியுடன் வாழ்கிருர்கள்
## பிரஜைகள் குழு புகார்

[யாழ்ப்பாணம்)

கடந்த 27ம் திகதி மீண்டும் சுதுமலை தாவடிப் பகுதியில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதை சுதுமலை பிரஜைகள் குழு கண்டித்துள்ளது

கடந்த மாதம் 27ம் திகதி சுதுமலை தாவடிப் பகுதிகளில் மீண்டும் விமானத் தாக்குதல் நடத்தி உயிரிழப்புக்கள் ஏற்படுத்தியதுடன் வீடுகள் சேதப்படுத்தப்பட்டும் கால்நடைகள் கொல்லப்பட்டும் இருப்புதால் இப்பகுதி மக்கள் அச்சத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றனர். அதிர்ச்சியினுல் பெண்களும் நோயாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். கருச்சிதைவுகளும் மாரடைப்புக்களும் ஏற்பட்டுள்ளன. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது கல்வியும் பாதிக்கப்பெற்றுள்ளது எனவே விமானத் தாக்குதலை நடாத்தி அப்பாவி மக்களைக் கொல்லாமல் இனப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்குமாறு வேண்டுகின்ருேம். என ஜனுதிபதிக்கு சுதுமலைப் பிரஜைகள் குழு முறையீடு செய்துள்ளது. பாதுகாப்பு அமைச்சருக்கும், இந்தியத் தூதுவருக்கும் முறையீட்டின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

# "இன்றைய சுவரொட்டிகள் இலக்கியங்களாகின்றன"

[யாழ்ப்பாணம்]

''நாங்கள் இப்போது வீதிகளில் அதிகமாகக் காணுகின்ற சுவரொட்டிகளில் இலக்கியகனமிக்க வாசகங்கள் காணப்படுகின்றன. இவ்வாருன கருத்தாழம்மிக்க சுவரொட்டிகள் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன.''

இவ்வாறு திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற 'மாற்று' காலாண்டு சஞ்சிகையின் விமர்சன அரங்கில் உரையாற்றிய ஆசிரியர் மா. சின்னத்தம்பி கூறினுர்.

ஓய்வுபெற்ற அதிபர் திரு. செ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இவ்விமர்சன அரங்கில் திரு. சின்னத்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில்; ''இலக்கியங்களுக்குரிய வடிவம். உருவம் ஆகியவை பற்றி அக்கறையே கொள்ளாமல் கருத்துக்களைப் படிப்பதிலே மக்கள் அதிகளவு ஆர்வம் கொள்ளுகின்றனர். இதனுல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் உண்மை அனுபவங்கள் கூட இலக்கியமாகி வருவதை மக்கள் ஆர்வத்துடன் வரவேற்கிருர்கள். இது மகிழச்சிதரும் விடயமொன்ருகும்'' என்ருர்.

எழுத்தாளர் சு இராசநாயகம் தமதுரையில்: விளம்பரத்திற்காகவும், வியாபாரத்திற்காகவும் சஞ்சிகைகள் வெளிவரும் இக்காலத்தில் 'மாற்று' தனது உயர்வான பணியைக் கவனத்துடன் செய்து வருகின்றது என்ருர்.

பலரின் விமர்சன உரையைத் தொடர்ந்து 'மாற்று' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. லே கேந்திரலிங்கம் பதிலுரையாற்றினுர்.

# மக்கள் அணிதிரண்டு போராட தொழிற்சங்கப் பிரமுகர் வலியுறுத்து

[கிளிநொச்சி]

இன்றைய அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ்ப்பேசும் மக்கள் அணிதிரண்டு போராடமுன்வர வேண்டும் என்று கிளிநொச்சிப் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த இராணுவ நடவடிக்கைகளுக்கெதிரான கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க வடபகுதி அமைப்பாளரும் கூட்டுத் தொழிற்சங்கங்களின் பிரமுகருமான திரு என். ஜெயநாதன் அறைகூவல்விடுத்தார்,

கிளிநொச்சி பராசக்தி படமாளிகையில் டாக்டர் கே. சுப்பையா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகள், கிராம முன்னேற்றச் சங்கதலைவர்கள், மாதர் அணியைச் சேர்ந்தவர்கள், பிரஜைகள் குழுவினர், பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், மதத் தலைவர்கள் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்

கிளிநொச்சி இராணுவ முகாமை அப்புறப்படுத்துமாறு போர்நிறுத்த ஆணைக்குழு செய்த சிபார்சை அமுல்படுத்துமாறு கோரியும், புகையிரத நிலைய துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்குமுகமாகவும், இராணுவ ரோந்து நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரியும் இக்கூட்டம் நடைபெற்றது.

இ. வ ஊழியர் சங்கப் பிரமுகர் திரு ஜெயநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இன்று தமிழ்ப்பேசும் மக்கள் ஒரு நெருக்கடியான நிலையில் உள்ளனர். அரசின் அடக்குமுறை ஆயுதப் படையின் துணைகொண்டு நடத்தப்படுகிறது இந்த நிலையில் நாம் முன்னெடுக்கின்ற கோரிக்கைகள் தெட்டத்தெளிவாகவும் காத்திரமானதாகவும் இருக்கவேண்டும்.

''போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது போன்ற போராட்ட வடிவங்களை கிளிநொச்சியில் நடத்துவதில் கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும் மக்கள் அணி திரண்டு எந்தப் போராட்டத்தையும் உணர்வுபூர்வமாக நடத்துவோமாக இருந்தால் துப்பாக்கி ஏந்தியுள்ள இராணுவத்தினர் பின்வாங்கவே தீருவார்கள்.

''இந்தச் சந்தர்ப்பத்தில் வடபகுதி தொழிலாளவர்க்கம் இன ஒடுக்குமுறைக்கெதிராகவும், இராணுவ முகாம்களை அப்புறப்படுத்துமாறு கோரியும், தமிழ்ப்பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் மற்றும் அமைப்புக்களுடன் சேர்ந்து போராடிவருகிறது''

கிளிநொச்சிப் பிரதேச மாதர் அணி அமைப்பாளரும் முன்னுள் தமிழரசுக்கட்சி மாதர் முன்னணிப் பிரமுகருமான திருமதி தியாகமலர் தியாகராசாவும் இக்கூட்டத்தில் உரையாற்றினுர்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# மீன் தட்டுப்பாடு; கருவாடு விலைபோகிறது!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நேற்று மீன் விலை இரு மடங்காக அதிகரித்திருந்ததுடன் விற்பனைக்கு வந்த மீன்களும் குறைவாகக் காணப்பட்டது.

சின்னக்கடை மீன்சந்தையில் நேற்றுக்காலை 11மணிக்கே மீன்விற்பனை முடிந்துவிட்டது. வழக்கமாக நண்பகல் 12 மணி வரை இங்கு விற்பனை நடக்கும்

வழக்கமாக 10 ரூபாவிற்கு விற்பனையாகும் மீன் 20 ரூபாவிற்கு மேல் நேற்று விற்பனையானது. சிலர் கருவாடு வாங்குவதில் ஈடுபட்டிருந்தனர். தாமதமாக வந்தவர்கள் மீன் வாங்காமலே திரும்பிச் சென்றனர்.

கடல் வலயச் சட்டத்தினால் கடற்றொழிலாளர் பலர் நேற்று தொழிலுக்குச்செல்லாததினால் மீன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் வழக்கமாக மீன் விற்பனை செய்வோரிடமும், நேற்று மீன் விலை அதிகரித்திருந்தது இவர்களின்தொகையும் குறைந்திருந்தது. [க]

# கிளிநொச்சியில் எதிர்ப்புக் கூட்டம்!

[கிளிநொச்சி]

இராணுவம் வீதியில் சூழ்ந்திருக்க கிளிநொச்சி பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த இராணுவ எதிர்ப்பு நடவடிக்கை கூட்டம் திட்டமிட்டபடிகிளிநொச்சியில் நடைபெற்றது

கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தில். இக்கூட்டம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தபோதும் கடைசி நேர ஏற்பாடாக பராசக்தி படமாளிகைக்கு கூட்டம்மாற்றப்பட்டது.

## ● கட்டுவன் ● குரும்பசிட்டி ● வறுத்தலைவிளான்

# குண்டு, 'ஷெல்' தாக்குதலினால் மக்கள் கிலிகொண்டு ஓட்டம்!

(மாவிட்டபுரம்)

பலாலி இராணுவ முகாமுக்கும் விமானப் படை முகாமுக்கும் அண்மித்த கிராமங்கள் என்றுமில்லாதவாறு நேற்று பீரங்கிக் குண்டுகளின் வெடிமுழக்கத்தாலும், ஹெலிகொப்டர்களிலிருந்து துப்பாக்கிச் சூடு, மோட்டர் ஷெல் தாக்குதலாலும் பேரதிர்ச்சிக்குள்ளாகின.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை அதிர்ச்சிநிலை மக்கள் மத்தியில் நிலவியது.

கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களே இந்த நிர்க்கதிக்குள்ளானவையாகும்.

கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்துக்கு மேல் வட்டமிட்ட ஹெலிகொப்டர்களிலிருந்து மோட்டர் 'ஷெல்' தாக்குதல் அதிர்ச்சியினால் அப்பாடசாலையில் கல்விபயின்றுகொண்டிருந்த சிறுவர்கள்-சிறுமிகளில் பலர் மயக்கமடைந்து விழுந்தனர்.

தெய்வாதீனமாக பாடசாலைமேல் குண்டுகள் தாக்காததால் மாணவர்கள் உயிர் தப்பினர். மயக்கமடைந்த பிள்ளைகளுக்கு உடனடியாக சிகிச்சையளிக்கப்பட்டது.

முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட பீரங்கிக்குண்டுகளுக்கு இரு வீடுகள் பலத்தசேதமடைந்தன ஒரு கல்லுடைக்கும் தொழிற்சாலையும் இத் தாக்குதலுக்கிலக்கானது

தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அண்மையிலுள்ள வெளியில் மூன்று குண்டுகள் விழுந்து வெடித்ததால் ஆழமான பள்ளங்கள் தோன்றியுள்ளன.

நேற்றுக்காலை தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கட்டுவன் பகுதிகளில் ஹெலிகொப்டர்களும், விமானங்களும் சுற்றிவந்ததை அடுத்து மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் 9-30 மணியளவில் வசாவிளான்,பலாலி பக்கமாக குண்டுச் சத்தங்களும், ஹெலிகொப்டர் சூடும் இடம்பெற்றது.

அதேநேரம் தெல்லிப்பழை நோக்கிவந்த ஹெலிகொப்டர் ஒன்று வறுத்தலைவிளான் என்னும் இடத்தில் குண்டொன்றைப் போடவே அது பாரிய சத்தத்துடன் வெடித்தது. இக் குண்டு வீழ்ந்த இடத்தில் பெரியதோர் பள்ளம் காணப்படுவதுடன், அருகிலுள்ள கல்நொருக்கும் ஆலைச் சுவர்கள் துளைக்கப்பட்டிருந்தன அருகாமையிலுள்ள வீடுகளுக்கும் சிறு சேதம் ஏற்பட்டது. இதையடுத்து இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மக்கள் பதறியடித்துக்கொண்டு ஒதுக்கிடங்களை நாடி ஓடினர் கடைகள் இழுத்து மூடப்பட்டன பாடசாலைகள் விடப்பட்டு மாணவர்கள் வீடு சென்றனர்

எங்கும் பரபரப்பு நிலவியது

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குச் சற்றுத் தொலைவில் இக்குண்டு வீழ்ந்து வெடித்ததால் வைத்தியசாலை வார்டுகளிலுள்ள நோயாளர்களும் பெரிதும் அதிர்ச்சி அடைந்தனர்.

## வண.பிதா---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிடத்தக்கது. அத்துடன் பல உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், படப்பிடிப்பாளர்களும், கத்தோலிக் மதகுருமாரும் காணப்பட்டனர்.

தீர்ப்பு நேற்றுக்காலை 9-30 மணிக்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் 9-30 மணிக்குத் தீர்ப்பு வழங்கப்படாததால் மக்கள் கலைந்துசென்று பின்னர் மீண்டும் 11 மணியளவில் கூடினர்.

சுமார் 11 மணியளவில் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து வண பிதா சிங்கராயர் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார். சுமார் 12 30 மணிக்குத் தீர்ப்பு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டதாயினும் அப்போதும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. 1 30 மணிக்குத் தீர்ப்பளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

### கதவுகள் திறக்கப்பட்டன

சுமார் ஒன்றே முக்கால்மணியளவில் நீதிமன்றக் கதவுகள் திறக்கப்பட்டு பொதுமக்கள் அனைவரும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இரண்டு மணியளவில் நீதிபதி திரு. சேனநாயக்கா நீதிமன்றத்துக்கு வந்து தமது தீர்ப்பை வாசித்தார்.

### குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை

இந்தத் தீர்ப்பு 131 பக்கங்களில் அடங்கியிருந்தது.

நீதிபதி தமது தீர்ப்பில் இவ் வழக்கைத் தாக்கல் செய்தவர்கள், குருமார் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்றும் அதனால் அவர்கள் இருவரையும் நிரபராதிகள் என்று விடுதலை செய்வதாகவும் கூறினர்.

இந்த வழக்கில் அரச தரப்பில் 18சாட்சியங்களும்.எதிர்த்தரப்பில் 4 சாட்சியங்களும அழைக்கப்பட்டிருந்தனர். அரசாங்கத் தரப்பில் அரச வழக்கறிஞர்களான திருவாளர்கள்: பீ ஆர் டி. சில்வா, மோகன் பீரிஸ், நளின் டி. சில்வா ஆகியோரும், மதகுருமாரின் சார்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்: ஏ பாலாதம்பு, கே எஸ் அழகராஜா, எக்ஸ்.எவ். சேவியர் ஆகியோரும் ஆஜராகினர்.

### விடுதலை பெற்றவுடன்...

வண. பிதா சிங்கராயர் விடுதலை பெற்று வெளியே வந்தவுடன் தீர்ப்பை அறிய வந்திருந்தவர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொண்டு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர் ''மீண்டும் யாழ்ப்பாணம் போவீர்களா?'' என்றும் கேட்டனர்.

சிரித்த முகத்துடனிருந்த பிதா சிங்கராயர் அவர்களை நோக்கிக் கையசைத்து எல்லோருக்கும் நன்றி கூறினர்.

### 'விசேட' அவதானி

தீர்ப்பை அறிய ஆவலுடன் வந்த வெளிநாட்டவர்களில் ஒரு பெண் அவதானி அனைவரினது கவனத்தையும் ஈர்ந்தார். இப்பெண் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியற் பிரிவின் செயலாளர் எனத் தெரியவருகிறது. (ய-ச)

## பர்மிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வது செயலாளருடன் இவர்கள் பற்றி தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்களும் தங்கள் மொழியில் சில நிமிடங்கள் உரையாடினர்கள்.

நிசாய் (31 வயது] சிகாய் [30 வயது] ரியனஜே [28 வயது குனுய் [27 வயது] ஆகிய நால்வரும். ரங்கூனிலுள்ள பியாயோமியூ கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள்மூங்கில் வெட்டுவதற்காக அழகான மூங்கில் வேலைப்பாடமைந்த குடிசை ஒன்று உள்ளடக்கிய மூன்றடுக்கு உல்லாச படகொன்றில் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு தீவுக்கு ஆற்றுவழியாகச சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று ஆற்றுநீர் வேகம் அதிகரித்து படகுடன் இவர்களை கடலில்தள்ளிவிட்டது.

ஒருநாள் கையிருப்பு உணவுடன் புறப்பட்ட இவர்கள், கடல்நீர் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் படகு நீருடன் வேகமாக அள்ளுப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. பலமைல் தூரம் சென்றபின் ஒருவாறு படகைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தபின் அவர்களுக்கு திக்குத் திசை தெரியாமல் போய்விட்டது. நான்கு திசைகளிலும் கடல்நீரைப் பார்த்தார்களே ஒழிய கரையைக்காண முடியவில்லை. சூரியனின் நடமாட்டத்தின்மூலம் நேரத்தை அவ்வப்போது அறிந்துகொண்டார்கள்.

படகிலிருந்த குடிநீர் முடிந்தபின் கடல்நீரைப் பருக நேரிட்டது. பச்சை மீன்களையும் கடலாமையையும் பிடித்து பசிக்கொடுமையால் புசித்தார்கள். இதனால் அவர்களுக்கு வயிற்றுக்குழப்பம் ஏற்பட்டது ஒன்றல்ல இரண்டல்ல பத்துநாட்கள் அவஸ்தைப் பட்டபின் நால்வரும் படகில் மயங்கி விட்டார்கள் படகு கரையைவந்து ஒதுங்கி து.

மாமுனை பகுதியிலுள்ள மக்கள், மயக்கமடைந்த நால்வருக்கும் சிகிச்சையளித்து, உணவளித்தபின் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தனர். அவர், இவர்களை பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைத்தார்.

இவர்களில் ஒருவருக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டதால் டாக்டர் முருகானந்தம் அவருக்குச் சிகிச்சையளித்தார். ஏராளமான மக்கள் வந்து அவர்களைப் பார்வையிட்டுச் சென்றனர். பனங்கிழங்கு, புளுக்கொடியல் அன்பளிப்புச் செய்தனர் அவர்கள் அவற்றை விரும்பி ருசித்துச்சாப்பிட்டு, சிரிப்புமூலம் தலையசைத்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். மொழிபுரியாததினால் சைகைமூலம் பேசிக் கொண்டனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த பர்மிய மொழி தெரிந்த ஒருவர் மூலம் இத்தகவல்களை பர்மிய இளைஞர்களிடமிருந்து அறிந்துகொண்டதாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர். (க)

## பலாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கமும் கோப்பாய் மத்திய மகாவித்தியாலயத்திலும் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

## பாலம்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாக வ.பி போ.ச. வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தூர் பாதையில் 9மைல் அதிகமாகச் செல்வதனால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

கோப்பாய் பாலம் தகர்க்கப்பட்டதால் புத்தூர் பாதையால் செல்லும் மினி ஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன

கைதடியைச் சேர்ந்த மாணவர்களும். அரசாங்க ஊழியர்களும் நேற்று நுணுவில் சந்திக்கு நடந்துவந்து அப்பாதையால் வந்த யாழ்ப்பாண பஸ்களில் ஏறி புத்தூர் ஊடாக யாழ்ப்பாணம் சென்றனர்.

சில பஸ்கள் புத்தூர் சென்று நுணுவில் ஊடாகச் சாவகச்சேரிக்கும், சில பஸ்கள் புத்தூரிலிருந்து நேராகச் சாவகச்சேரிக்கும் செல்கின்றன. லொறிகள் புத்தூரிலிருந்து மீசாலை ஊடாகச் செல்கின்றன. [க]

## கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் பலியானர்.

இவர் தனது வீட்டிற்கு முன்னால் உள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது கவச வாகனங்களில் வந்த ராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு வயலுக்கு முன்பாகவுள்ள தனது வீட்டைநோக்கி ஓடியபோதே ராணுவத்தினர் இவரை நோக்கிச் சுட்டனராம்.

## ஆனாலும்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், டாக்டர் ஜெயகுலராஜா, திரு ஜெயதிலகராஜா ஆகியோருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி விசாரணைக்குளடுத்துக்கொள்ளப்படும்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கில் விடுதலையடைந்த பிதா சிங்கராயர், நீதிமன்றத்துக்குக்கொண்டுவரப்பட்ட அதே வானில் மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.


# மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தங்கம்மா

காரைநகர், களபூமியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தங்கம்மா சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கொட்டாஞ்சேனை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, இராசம்மா, அன்னபாக்கியம், நல்லம்மா, கணபதிப்பிள்ளை (களபூமி - அரிசி ஆலை), இராசேந்திரம் (Accountant, Confifi Management Services) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற சோமசுந்தரம், பரமேஸ்வரன், திருஞானசம்பந்தன், இராசேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4-03-86) செவ்வாய்க்கிழமை தில்லை மயானத்தில் நடைபெறும்.

[C 1061]

### திருமதி நாகம்மா கந்தையா
(முரசுமோட்டை)

கந்தையா நாகம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஸ்ரேசன் மாஸ்டர் (பர்மா) கந்தையாவின் அன்பு மனைவியும், சபாரட்ணம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), மகேஸ்வரி, ருக்குமணி (மலேசியா), நித்தியேஸ்வரி, கண்ணபிரான் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுந்தரம் A. S ரத்தினம் (தபால் அதிபர், யோகபுர்), சரவணமுத்து (M.P.C.S. அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 4-3-86 இன்று) செவ்வாய்க்கிழமை பி ப 2-00 மணியளவில் முரசுமோட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. கணேசமூர்த்தி,
பியு பவரேஜஸ் ஏஜன்சி,
கிளிநொச்சி.

[C 1043]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126